இருக்கிறது. இச்சட்ட முன் வடிவில் நெசவாளர்களின் சுகாதாரத்தைப் பேணுவதற்கான வழிமுறைகளான சுற்றுப்புறத் தூய்மை, காற்றோட்ட வசதி, போதிய வெளிச்சம், இடவசதி, குடிநீர், கைகழுவுவதற்கான வசதிகள், குழந்தைகள் காப்பகம் போன்றவற்றிற்கான விதிமுறைகள் சேர்க்கப்பட்டுள்ளன.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த கைத்தறி நெசவாளர்களுடைய சுகாதாரத்தைப் பேணுகின்ற விரிவான திட்டத்தோடு அவர்களை நல்லமுறையில் பாதுகாப்பதற்கும் சட்டம் கொண்டுவரப்படும் என்று அமைச்சர் அவர்கள் கூறினார்கள். இந்த சட்ட மன்றக் கூட்டத் தொடரிலேயே அதற்குரிய சட்டம் கொண்டு வரப்படுமா ? அப்படியானால் எந்தத் தேதியில் கொண்டுவந்து அறிமுகம் செய்யப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இந்த கூட்டத் தொடரிலேயே கொண்டு வரப்படுமா என்று வேண்டுமானால் கேள்வி கேட்கலாம், ஆனால் எந்தத் தேதி என்ற விவரங்களை எல்லாம் கேட்டால் அதற்குரிய விவரம் அமைச்சரிடத்திலே இருக்காது.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் கைத்தறி நெசவாளர்களின் சுகாதாரத்தைப் பேணுகின்ற திட்டத்தை என்னென்ன முறைகளிலே செயல்படுத்துவதற்கு அரசாங்கம் முடிவு செய்திருக்கின்றது என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் தலைவர் அவர்களே, அதற்குரிய சட்டமுன்வடிவை அறிமுகம் செய்து விவாதிக்கின்றபோது மிகவும் விரிவாக விவாதிக்கலாம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தாயமங்களம் குடிநீர் திட்டம்.

* வினா எண் 934.—திரு. செ. சிவசாமி : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இளையான்குடி தாலுகா தாயமங்களம் குடிநீர் திட்டம் நான்கு ஆண்டுகள் ஆகியும் இன்னும் முடியாமல் இருப்பது அரசுக்கு தெரியுமா ?

(ஆ) எப்பொழுது முடிக்கப்படும் ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : (அ) தாயமங்களம் கிராமத்தை தலைமைப் பணியிடமாகக் கொண்டு, இளையான்குடி, காளையார் கோயில் மற்றும் போகலூர் ஆகிய ஒன்றியங்களைச் சார்ந்த 67 சிற்றூர்களுக்கான

1981 ஏப்ரல் 29]

கூட்டுக் குடிநீர்த் திட்டம் 1978 ஆம் டிசம்பர் மாதம் ஆரம்பிக்கப்பட்டது. இவற்றில் 44 சிற்றூர்களில், பணிகள் முடிந்து குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.

(ஆ) எஞ்சிய 23 சிற்றூர்களில், பணிகள் விரைவில் முடிவடையும்.

திரு. செ. சிவசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இளையங்குடி தாலுக்கா தாயமங்கலம் குடிநீர் திட்டத்தில் போகலூர் சேர்க்கப் படவில்லை, அது தனியாக இருக்கின்றது. ஆனால் இங்கே தவறான நியூஸ் கொடுக்கப்படுகின்றது. இன்றைக்கு 6 இடங்களில் போர்கள் போடப்பட்டும் தண்ணீர் போதுமான அளவுக்குக் கிடைக்கவில்லை. ஆகவே மேலும் போர் களைப் போட்டு அந்தப் பகுதி முழுவதையும் இந்தத் திட்டத்திலே கொண்டு வருவதற்கு அரசு ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மொத்தம் 3 ஒன்றியங்களில் அதாவது 67 சிற்றூர்களுக்கு குடிநீர் திட்டம் கொடுக்கப்படும் என்று என்னிடத்திலே தகவல் இருக்கின்றது. அதில் 44-க்கு கொடுத்தாகிவிட்டது. மேலும் 23-க்கு கொடுக்கப்படும் விரைவில் என்று இருக்கின்றது. மொத்தமான 67 கிராமங்கள் பற்றிய விவரங்கள் என்னிடத்திலே இல்லை. மற்றபடி ஏதாவது குறை இருந்தால் அதைப்பற்றி மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எழுதிக் கொடுத்தால் உண்மையாகவே குறை இருக்குமேயானால் அதற்குரிய ஏற்பாடுகள் செய்யப் படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. செ. சிவசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, கடுமையான வறட்சி ஏற்பட்டு 3, 4 மாதங்கள் ஆகின்றன. இன்றைக்கு வரை போதிய குடிநீர் இல்லாமையின் காரணமாக மூன்று அல்லது நான்கு மைல்களுக்கு அப்பால் சென்று தண்ணீர் எடுத்து வரக்கூடிய நிலைமை இருக்கின்றது. அந்த நிலையைப் போக்குவதற்கு அரசாங்கம் உன்னிப்பாக நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 44 சிற்றூர்களில், முடிந்துவிட்டது என்றும், 23 சிற்றூர்களில் பணிகள் விரைவில் முடியும் என்றும் கூறி இருக்கிறேன். அதுவே இதற்குப் பதிலாகும்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS